தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 162/ந/2023
நாள் 13.07.2023

திரு. P.S. சுதாகரன்,
கோவில்பட்டி,
தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, தனுஷ்கோடியாபுரம் தெரு, எண்.153/14 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.S. சுதாகரன் என்பவரின் 04.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.05.2023 அன்று பெறப்பட்டு 162/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, தனுஷ்கோடியாபுரம் தெரு, எண்.153/14 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.S. சுதாகரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட சத்திரம் ரத வீதியில் அமைந்துள்ள மூன்று மாடிகளில் சுமார் 20–க்கும் மேற்பட்ட கடைகளை உடைய மகாராஜா வணிக வளாகத்தில் முறையான வாகன நிறுத்துமிடம் மற்றும் அவசர வழி, தீயணைப்பு கருவிகள் இல்லாத நிலையில் உள்ளதால் கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் கடந்த 15.09.2020 அன்று நேரில் புகார் மனு கொடுத்தேன். ப.நி.சி.து. அரசாணை எண்.99/2015–படி மனு ரசீது மற்றும் மனு மீது எடுத்த நடவடிக்கை குறித்து முப்பது தினங்கள் கடந்த நிலையில், பதில் வரவில்லை என்பதால் கடந்த 29.12.2020 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் குறை தீர்க்கும் பிரிவின் call your collector என்ற WhatsApp Messenger வழியாக அரசாணை 99/2015–ன்படி என் மனுமீது எடுத்த நடவடிக்கை குறித்து தகவல் பெற்றுத் தர கோரிய போது கடந்த 05.02.2021

அன்று கோவில்பட்டி நகராட்சி பொறியாளர் அவர்கள் அந்த வணிக வளாக உரிமையாளர்களுக்கு, நான் பொருளில் கூறிய குறைகளை சரி செய்ய வலியுறுத்தி உள்ளதாக தெரிவித்து இருந்தது. அப்படி என்றால் விரைவில் சரி செய்யப்படும் என்று நம்பிக்கையுடன் இருந்தேன். ஆனால் மேற்படி வணிக வளாகத்தில் எவ்வித அடிப்படை வசதியும் செய்யப்படவில்லை.

எனது புகார் மனுவினை ஏற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மீண்டும் நடவடிக்கை எடுக்க கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனை நடவடிக்கைக்கு எடுத்துக்கொண்ட கோவில்பட்டி நகராட்சி ஆணையர் அவர்கள் கடிதம் ந.க.எண்.22621/2022/எப்1 நாள் 29.12.2022–ல் மகாராஜா வணிக வளாக உரிமையாளருக்கு முறையான வாகனம் நிறுத்துமிடம், அவசர வழி மற்றும் தீயணைப்பு கருவிகள் பொருத்திய விபரம் ஆகியவற்றை கடிதம் கிடைத்த ஏழு தினங்களுக்குள் எழுத்துப் பூர்வமாக நகராட்சிக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவித்து இருந்தார்கள்.

அதன் பின்னர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது போல் தோன்றுகிறது.

அதன் பின்னர் வணிக வளாக உரிமையாளர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு எனது மனு நிராகரிக்கப்பட்டதா அல்லது உரிமையாளர் எந்த ஆவணங்களையும் அளிக்கவில்லையா ? அந்த வணிக வளாகத்தில் எனது புகாரில் தெரிவித்தபடி அவசர வழி, வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் தீயணைக்கும் கருவிகள் இல்லை ஆகையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது போன்ற எந்த தகவலும் எனக்கு தெரிவிக்கவில்லை.

ஆகையால் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்கள் இதுகுறித்து தக்க விசாரணை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் தனது 06.06.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"கோவில்பட்டி நகராட்சி வார்டு எண்.15, சத்திரம் கிழக்கு தெரு, கதவு எண்.31 B, 31 C to 31 G, 31 H to 31 K, 31 K–1, 31 K 2 to 31 K 8, 31 K 9 to 31 K 10, 31/5 to 31/8, 31/1 to 31/4 –ல் அமைந்துள்ள மகாராஜா வணிக வளாகம் நகராட்சி அலுவலர்களால் களப்பணி மேற்கொள்ளப்பட்டதில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 35 (4) மற்றும் 39 (5) ANNEXURE IV (Part –I S.L.No.2–ன்படி போதிய வாகனம் நிறுத்துமிட வசதிகள், தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருந்தி மற்றும் கட்டிட வசதிகள் 2019 விதி 64–ன்படி தீ விபத்து பாதுகாப்பு உபகரண வசதிகள் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019 விதி 53–ன்படி அவசர கால வெளியேறும் வழிகள் உள்ளிட்ட

வசதிகளை ஏற்படுத்தி அதன் விபரத்தினை நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு தெரிவிக்குமாறு கட்டட உரிமையாளர் திரு.எம்.சரவணக்குமார், திருமதி.பிச்சம்மாள் என்பவர்களுக்கு கோவில்பட்டி நகராட்சி அலுவலக 08.06.2023 ம் தேதிய அறிவிப்பு வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பில் வணிக வளாக கட்டடத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் காட்டும் வரைபடம், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணி அலுவலர் தூத்துக்குடி அவர்களிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச்சான்று, கோவில்பட்டி வருவாய் வட்டாட்சியர், வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்புத்துறை அவர்களிடமிருந்து பெறப்பட்டதமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் உரிமம் நகல் மற்றும் கோவில்பட்டி நகராட்சியால் வழங்கப்பட்ட சுகாதாரச் சான்று நகல் ஆகிய சான்றாவணங்களுடன் 21 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்குமாறும், தவறும் பட்சத்தில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தல்) சட்டம் 1998 சட்டப் பரிவுகளின்படி உரிய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கட்டிட உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டு மனுதாரர் அளித்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டடம் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடமாகும். மேற்காண் கட்டடம் கட்டும் காலத்தில் நடைமுறையிலிருந்து வந்த அடுக்குமாடி மற்றும் பொது கட்டட விதிகள் 1973 ரத்து செய்யப்பட்டு 04.02.2019 ம் தேதி முதல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019 தற்போது நடைமுறையிலிருந்து வருகிறது. இந்நிகழ்வுகளில் தற்போது நடைமுறையிலிருந்து வரும் கட்டட விதிகளின்படி கட்டட உரிமையாளர்களுக்கு உரிய அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாகத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் முறையீட்டு மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டடம் சுமார் 30 வருடங்களுக்கு முன்னரே கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும் மற்றும் 30 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்ட கட்டடங்களுக்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கட்டட விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்வதில் சட்டம் சார்ந்த பிரச்சனைகள் உருவாகும் நிலை உள்ளதை கருத்தில் கொண்டும் கட்டட உரிமையாளர்களுக்கு மீண்டும் இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டு, நிபந்தனைகளை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் கட்டட உரிமையாளர்கள் மீது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998–ன் கீழ் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்ற விவரத்தை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் கோவில்பட்டி நகராட்சி ஆணையரும் 27.06.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.06.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. P.S. சுதாகரன் என்பவர் 27.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சத்திரம் ரத வீதியில் மூன்று மாடிகளுடன் கூடிய மகாராஜா வணிக வளாகம் உள்ளது. 2 மாடி கட்டடத்திற்கு மட்டும் அனுமதி பெற்றுவிட்டு, அங்கு 3 மாடி கட்டடம் கட்டியுள்ளனர். மேற்கண்ட கட்டடத்தில் முறையான வாகன நிறுத்தம், தீயணைப்பான்கள், அவசரகால வழி ஆகிய எதுவுமில்லாமல் இயங்கி வருகிறது. இது குறித்து கோவில்பட்டி நகராட்சிக்கு புகார் மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மேற்கண்ட மகாராஜா வணிக வளாகத்திற்கான போதுமான வாகன நிறுத்தும் இடம் ஒதுக்கீடு செய்திடவும் மேலும் பாதுகாப்பு அம்சங்களான தீயணைப்பான்கள் வைப்பது மற்றும் அவசரகால வழி ஆகியவற்றை ஏற்படுத்திடவும் மேலும் பொதுமக்கள் அங்கு சிரமின்றி சென்று வரவும் ஆவன செய்யுமாறும், மேற்கண்ட பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்யாத நகராட்சியினர் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர், நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் 27.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்.

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகராட்சி வார்டு எண் 15ல் அமைந்துள்ள மகாராஜா வணிகக் கட்டடத்தின் மீதான புகார் மனுவைபொட்டி மேற்கண்ட கட்டடம் ஆய்வு செய்யப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடத்திற்காக பெறப்பட்ட வரைபட அனுமதி, வாகன நிறுத்துமிடம் குறித்த தகவல், தீ பாதுகாப்பு உபகரணங்கள் / வசதிகள் மற்றும அவசர கால வெளியேறும் வசதிகள் குறித்த விவரங்கள் போதிய ஆவணங்களை நகராட்சிக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அவகாச காலம் முடிவுற்றவுடன் தொடர் நடவடிக்கை நகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் நகராட்சி ஆணையாளரான எனது 6.6.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் அறிக்கை, நகராட்சி ஆணையர், நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சார்ந்த மனுதாரர் திரு. P.S. சுதாகரன் என்பவர் தனது 04.05.2023 நாளிட்ட மனுவில் கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட சத்திரம் ரத வீதியில் அமைந்துள்ள 20 கடைகளையுடைய 3 மாடிகள் கொண்ட மகாராஜா வணிக வளாகத்தில் முறையான அவசர வழி, தீயணைப்புக் கருவிகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் இல்லாதது குறித்து புகாராக தெரிவித்துள்ளார்.

கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 20 கடைகள் கொண்ட 3 மாடி கட்டடங்களுடன் கூடிய மகாராஜா வணிக வளாகத்தில் அவசர வழி, தீயணைப்புக் கருவிகள் மற்றும் போதிய வாகனங்கள் நிறுத்துமிடம் இல்லாதது குறித்து மனுதாரால் கோவில்பட்டி நகராட்சிக்கு ஏற்கனவே 15.09.2020 அன்று புகாராக தெரிவித்தும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 21.11.2022 அன்று நினைவூட்டு மனுவும் அளிக்கப்பட்டுள்ள நிலையில் நகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் இம்முறைமன்ற நடுவத்தினை நாடியுள்ளார்.

இந்நிலையில் கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் தனது 08.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மகாராஜா வணிக வளாகக் கட்டட உரிமையாளரிடம் இக்கட்டடம் தொடர்பான

(i) தூத்துக்குடி மாவட்ட தீயணைப்பு மீட்பு பணிகள் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச் சான்று,

(ii) கோவில்பட்டி வருவாய் வட்டாட்சியர், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்புத்துறையிடமிருந்து பெறப்பட்ட தமிழ்நாடு பொதுக்கட்டடங்கள் உரிமம் மற்றும் கோவில்பட்டி நகராட்சியிடமிருந்து பெறப்பட்ட சுகாதாரச் சான்றின் நகல்கள் ஆகியவற்றை 21 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கட்டட உரிமையாளருக்கு நகராட்சியால் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளதை ஆணையரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

நகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களை ஒரே இடத்தில் வாங்கும் பொருட்டு, வணிக வளாகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாறு குழந்தைகள் முதல் வயது முதியவர்கள் வரை கூடும் வணிக வளாகத்தில் முறையாக சொத்து வரியினை வசூலிக்கும் கோவில்பட்டி நகராட்சியினர், மேற்காணும் இடங்களில் அவசரவழி, தீயணைப்புக் கருவிகள் போன்றவை இல்லாமல் இருப்பது பேரிடர் காலத்தில் பெரும் விபத்துக்களை ஏற்படுத்தும் என்பதை கருத்தில் கொள்ளாமலும், அவ்வப்போது வணிக வளாகத்தை ஆய்வு செய்யாமலும் இருக்கும் இச்செயலினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும், மேற்படி வணிக வளாக உரிமையாளரிடம் நகராட்சியால் கோரப்பட்ட ஆவணங்களை நகராட்சியினர் 45 நாட்களுக்குள் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேற்காணும் நடவடிக்கையினை உரிய காலத்தில் மேற்கொள்ள தவறும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட கோவில்பட்டி நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The Kovilpatti Muncipality's indifferent report and docile approach to the complaint are censured by this Forum. Pro-active mindset in curbing violations of building rules is totally absent that betrays the field officials lethargy, collusion and abetment besides shocking dereliction of duties at the level of the Commissioner himself by defaulting is reviewing the subject matter in the office. The DMA is directed to launch disciplinary action against the delinquent officials responsible for the failure in controlling Building rule violations. The Action taken report should be sent to this Forum in the next 45 days. The hide and seek game of asking the Building Owner to submit the plan approval should stop at once and necessary field action should be launched by contacting the local Town and Country Planning officials whose office would have the copies of the planning permission. The Municipality itself should have its copies of the Building Plan approvals. It is just a ploy to delay, drag on and dlilute the issue endlessly synonyomous with complicity and collusion with the law breakers.

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. P.S. சுதாகரன்,
153/14, தனஷ்கோடியாபுரம் தெரு,
கோவில்பட்டி – 628 501, தூத்துக்குடி மாவட்டம்.

2) ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/7/23

உதவிப் பதிவாளர்

18/07/23